இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 334 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 30 – ஞாயிற்றுக்கிழமை 14 ஜுலை 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 334 : Thiruvalluvar Year - 2055 - Aani 30 - Sunday 14 July 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


### முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு மக்கள் மாபெரும் அங்கீகாரம்! விக்கிரவாண்டி தொகுதியில்

# தி.மு.க. மகத்தான வெற்றி!

## கழக வேட்பாளர் அன்னியூர் சிவா - பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் !

**விக்கிரவாண்டி, ஜூலை 14-**

**விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவா மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் மக்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு மாபெரும் அங்கீகாரம் அளித்துள்ளனர்.**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த நா.புகழேந்தி மறைவெய்தியதால் அங்கு இடைத் தேர்தல் நடைபெற்றது.

தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா உள்பட 29 பேர் போட்டியிட்டனர். இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு கடந்த 10ந்தேதி நடைபெற்றது.

மொத்தம் 276 வாக்குச்சாவடிகளிலும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தமுள்ள 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர்களில் 1 லட்சத்து 95 ஆயிரத்து 495 பேர் வாக்களித்தனர். இது 82.47 சதவீத வாக்கு பதிவாகும்.

ஓட்டுப்பதிவு முடிவடைந்ததும், வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான பனையபுரம் அரசு மேல் நிலைப்பள்ளி மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் அமைதியான முறையில் வாக்கு எண்ணிக்கையை நடத்தி முடிக்க ஏதுவாக, வாக்கு எண்ணும் மையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. திஷாமித்தல், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தீபக் சிவாச் ஆகியோர் தலைமையில் 4 கூடுதல் போலீஸ் சூப்பிரண்டுகள், 7 துணை போலீஸ் சூப்பிரண்டுகள், 28 இன்ஸ்பெக்டர்கள், 86 சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார், தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், துணை ராணுவப்படையினர் என 1,195 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



**தபால் வாக்குகள்!**

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இதையொட்டி காலை 7.30 மணியளவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையின் சீல் அகற்றப்பட்டு வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

அதுபோல் விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் இருந்து தபால் வாக்குச்சீட்டுகள் அடங்கிய பெட்டிகளும் கொண்டு வரப்பட்டன. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதும் முதலாவதாக தபால் வாக்குகள் எண்ணப்பட்டன.

இதற்காக அங்குள்ள தனி அறையில் 2 மேஜைகளில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டது. அதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணப்பட்டு வருகிறது. இதற்காக மற்றொரு அறையில் 14 மேஜைகள் போடப்பட்டது. ஒவ்வொரு மேஜையிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை நிகழ்வுகளை சி.சி.டி.வி. மூலம் கண்காணிக்கவும், வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கையானது, 20 சுற்றுகளாக நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை விபரம் வருமாறு:-



**முதல் சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 5564

அன்புமணி (பா.ம.க.) 2894

அபிநயா (நா.த.க.) 303

**இரண்டாம் சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 12002

அன்புமணி (பா.ம.க.) 5904

அபிநயா (நா.த.க.) 849

**மூன்றாவது சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 18057

அன்புமணி (பா.ம.க.) 7323

அபிநயா (நா.த.க.) 1383

**நான்காவது சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 24171

அன்புமணி (பா.ம.க.) 8825

அபிநயா (நா.த.க.) 1763

**ஐந்தாவது சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 31151

அன்புமணி (பா.ம.க.) 11483

அபிநயா (நா.த.க.) 2275

**ஆறாவது சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 38554

அன்புமணி (பா.ம.க.) 13656

அபிநயா (நா.த.க.) 3178

**ஏழாவது சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 44780

அன்புமணி (பா.ம.க.) 17359

அபிநயா (நா.த.க.) 3556

**எட்டாவது சுற்று! (காலை 11.30 மணி நிலவரம்)**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 51567

அன்புமணி (பா.ம.க.) 19812

அபிநயா (நா.த.க.) 4187

---

### பிரதமரின் சொந்த மாநிலத்திலேயே தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டம்!

## குஜராத்தில் தனியார் நிறுவன வேலைக்கான நேர்காணலில் தள்ளுமுள்ளு !

### ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திரண்டனர்!

*காந்திநகர், ஜுலை 14-*

பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் தனியார் நிறுவன வேலைக்கான நேர்காணலுக்கு ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலத்தின் அங்கலேஷ்வரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று, குறைந்த அளவிலான காலிப்பணியிடங்களை நிரப்ப நேர்காணலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதனையறிந்த இளைஞர்கள் ஆயிரக்கணக்கானோர் நேர்காணல் நடைபெற்ற ஹோட்டல் முன் திரண்டனர். அடித்துப் பிடித்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் ஹோட்டலுக்குள் உள்ளே நுழைய முற்பட்டதால், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. ஹோட்டலின் வாயிலில் தடுப்புக்காக அமைக்கப்பட்டிருந்த கம்பி, பாரம் தாங்காமல் உடைந்ததால், இளைஞர்கள் கீழே விழுந்து படுகாயமடைந்தனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

வளர்ச்சிக்கான மாநில மாடலாக குஜராத் அடையாளப்படுத்தி வரும் சூழலில், சில காலிப்பணியிடங்களுக்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் குவிந்தது அங்கு தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளது. மோடியின் சொந்த மாநிலத்திலேயே வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுவதாக விமர்சிக்கும் அரசியல் விமர்சகர்கள், இதன் மூலம் குஜராத் பா.ஜ.க. அரசின் பொய் முகம் தோலுரிக்கப்பட்டிருப்பதாகவும் சாடினர்.

**ராகுல்காந்தி விமர்சனம்!**

இதனிடையே இது தொடர்பான வீடியோவை டேக் செய்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவில் ‘வேலையின்மை நோய்’ ஒரு தொற்றுநோயாக உருவெடுத்துள்ளதாகவும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் இந்த நோயின் ‘மையமாக’ மாறியுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். சாதாரண வேலைக்காக இந்தியாவின் எதிர்காலமாக கருதப்படும் இளைஞர்கள் வரிசையில் நிற்பது, பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்காலத்தின் உண்மை முகம் என விமர்சித்துள்ளார்.

**வேலையில்லாத் திண்டாட்டம்!**

தனியார் ஹோட்டல்களில் வேலைக்காக இளைஞர்களின் இந்த அவசரம், குஜராத்தில் பணக்காரர்கள் மட்டுமே பலன் அடைந்துள்ளனர் என்பதற்கு தெளிவான சான்று என காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இணையதளபதிவில், குஜராத்தில் 30 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சியில் இருந்தாலும், மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதை வீடியோ தெள்ள தெளிவாக காட்டுவதாகவும் விமர்சித்துள்ளார்.

